பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*03 10 2025* *FRIDAY* *7.15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

1. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீரில் நிகழ்ந்த வன்மையான மனித உரிமை மீறலுக்கு பாகிஸ்தான் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

2. மும்பை – அஹமதாபாத் புல்லட் ரயில் தட கட்டுமானப் பணிகள் உயர்தரத்துடன் விரைந்து முடிக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
3. மத்திய தேர்தல் பார்வையாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் அறிவுறுத்தியுள்ளார்.
4. பிரதமரின் மாணவர் பயிற்சி திட்டத்தின் கீழ், பொறியியல் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு, சென்னை ஐ.ஐ.டி-யில், வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கப்படும் என்று அதன் இயக்குநர் பேராசிரியர் வி. காமகோடி தெரிவித்துள்ளார்.
5. *Al Ain* மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Shriyanshi Valishetty* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் நிகழ்ந்த வன்மையான மனித உரிமை மீறலுக்கு பாகிஸ்தான் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியின் பல இடங்களில் அடிப்படை வசதிகள் கேட்டு போராட்டம் நடத்தியவர்கள் மீது பாகிஸ்தான் படையினர் கொடூரமாக தாக்கியதில் உயிரிழப்பு நேரிட்டதாக கூறினார்.

பாகிஸ்தானின் நெருக்குதலான அணுகுமுறை இதன்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பகுதியில் உள்ள வளங்களை அந்நாட்டில் உள்ள தீவிரவாத அமைப்புகள் சுரண்டி வருவதாகவும், பல பகுதிகளை பொதுமக்களிடமிருந்து அவர்கள் அபகரித்து வருவதாகவும் திரு ஜெய்ஷ்வால் குற்றம் சாட்டினார்.

பங்களாதேஷில் உள்ள பிரச்சினைகளுக்கு இந்தியாவும் ஒரு காரணம் என்று அந்நாட்டு உள்துறை ஆலோசகர் ஜகாங்கிர் ஆலம் கூறியதை, திரு ஜெய்ஷ்வால் திட்டவட்டமாக மறுத்தார்.

பங்களாதேஷ் இடைக்கால அரசின் இந்த குற்றச்சாட்டு, உண்மைக்கு புறம்பானது, ஆதாரமற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷில் சட்டம் – ஒழுங்கு நிலைமையை பராமரிக்க அந்நாட்டு அரசு தவறிவிட்டதாகவும், அந்நாட்டின் தற்போதைய நிலைக்கு காரணம் மற்றவர்கள் என அவசியமற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள் முன்வைப்பதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

>>>>>>><<<<<<<

சூரத் நகரில் மேற்கொள்ளப்பட்டுவரும் *Bullet* ரயில் தட கட்டுமானப்பணிகளை இந்தியா வந்துள்ள ஜப்பான் உள்கட்டமைப்பு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு *Hiromasa Nakano*-வுடன், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று பார்வையிட்டார்.

மும்பை – அகமதாபாத் இடையே அமைக்கப்பட்டு வரும் இந்த *Bullet* ரயில் தடத்தில் முக்கிய கட்டுமானங்களை அவர்கள் ஆய்வு செய்தனர்.

நடைபெற்றுவரும் கட்டுமானப்பணிகள் திருப்திகரமாக இருப்பதாக இரு அமைச்சர்களும் தெரிவித்தனர்.

கட்டுமான வேலைகள் உயர்தரத்துடன் விரைவாக நடைபெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

இந்தியாவில் முதலாவது புல்லட் ரயில் சேவை, ஜப்பான் நாட்டு உதவியுடன் தொடங்கப்படுவது இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேம்படுத்தும் என்றும் அவர்கள் கூறினர்.

>>>>>>><<<<<<<

இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடனடியாக மீட்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களையும் மீட்டு வந்த பெருமை, பிரதமர் திரு. நரேந்திர மோடியையே சாரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ராமநாதபுரத்தில் நடைபெற்ற ஒரு அரசு நிகழ்ச்சியில், கச்சத்தீவு பிரச்சினையில் மத்திய அரசை குறைகூறி, தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பேசியிருப்பது நகைப்புக்குரியது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் ஆதாயத்திற்காக, காங்கிரசும், திமுகவும் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்ததாகவும் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச சமூக பாதுகாப்பு மன்ற கூட்டத்தில் பங்கேற்றுள்ள மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, மன்றத்தின் தலைவர் மற்றும் மலேசியா, உகாண்டா நாடுகளின் தூதுக்குழுவினருடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் பேசிய அமைச்சர், திறன் மேம்பாடு, பாதுகாப்பான தொழிலாளர் பகிர்வு, தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு ஆகியவற்றில் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்ததாக தெரிவித்தார்.

சமூக பாதுகாப்பில் இந்தியா செய்துவரும் பணிகளை சர்வதேச சமூக பாதுகாப்பு மன்றத்தின் தலைவர் பாராட்டியதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

மலேசியாவின் மனிதவள அமைச்சர் திரு ஸ்டீபன் சிம்மிடம் அந்நாட்டின் தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்தியா உதவிக்கரம் நீட்டும் என தாம் தெரிவித்தாக கூறினார்.

இந்தியாவின் திறன் மிக்க பணியாளர்களை மலேசியா ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தாம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ந்துவரும் நாடுகள், உலகளாவிய தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தாம் வலியுறுத்தியதாகவும் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய தேர்தல் பார்வையாளர்கள், அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களின் குறைகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் அறிவுறுத்தியுள்ளார்.

பீகார் மாநில சட்டப்பேரவை தேர்தல் மற்றும் சில மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தலுக்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்தில் பேசிய அவர், வாக்குச்சாவடிகளுக்கு சென்று, தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள புதிய நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தேர்தல் சட்டங்கள், விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தெளிவாக அறிந்து வைத்திருக்க வேண்டும் என்றும், அவற்றின் அடிப்படையில் உடனுக்குடன் முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

தேர்தல் தொடர்பான புகார்களுக்கு நேர்மையாகவும், நியாயமாகவும் தீர்வு காண வேண்டும் என்றும் திரு. கியானேஷ் குமார் தெரிவித்தார்.

287 ஐஏஎஸ் அதிகாரிகள், 58 ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட 425 பேர், இன்று புதுதில்லியில் நடைபெற்ற தேர்தல் ஆணையக் கூட்டத்தில் மத்திய தேர்தல் பார்வையாளர்களாக பங்கேற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<<

தூய்மை இந்தியா சிறப்பு இயக்கத்தின் கீழ், நாடுமுழுவதும் மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்யும் இயக்கத்தை மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி இன்று தொடங்கி வைத்தார்.

இன்று முதல் இம்மாதம் *31*ஆம் தேதி வரை நடைபெறும் இந்த இயக்கத்தில், மின்னணு கழிவுகள் முறையாக சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சுரங்க அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழுது நீக்க இயலாத கணினிகள், லேப்டாப்கள், பிரிண்டர்கள், *LED Display*-க்கள், கைபேசிகள் மற்றும் பயன்படாத அனைத்து மின்னணுப் பொருட்களும் சேகரிக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

தேசிய கனிம இயக்கத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு, மின்னணு கழிவுகள் மறுசுழற்சி இயக்கம் உதவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு பொருட்களுக்கான கனிமங்களின் இறக்குமதியை குறைப்பதோடு, தூய்மை எரிசக்தி இயக்கத்தையும் இந்த முயற்சிகள் வலுப்படுத்தும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

பொறியியல் படிப்பில் மூன்றாவது மற்றும் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு சென்னை ஐ ஐ டி-யில் பத்து முதல் *12* வாரங்கள் பயிற்சி அளிக்கப்படும் என்று சென்னை ஐ ஐ டி-யின் இயக்குனர் பேராசிரியர் வி. காமகோடி தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ ஐ டி-யில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பிரதமரின் மாணவர் பயிற்சித் திட்டத்தின்கீழ் முதல் முறையாக பொறியியல் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏதுவாக பயிற்சிகள் வழங்கப்படும் என்று கூறினார்.

சென்னை ஐ.ஐ.டி-யுடன் மத்திய அரசு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள தேசிய மாணவர் வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படும் வகையில், மாணவர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

கணிதம் உட்பட மூன்று பிரிவுகளில் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படும் என்றும், இதற்கு மாணவர்கள் விண்ணப்பித்து தேர்வு எழுத வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று மணிநேரம் நடைபெறும் இந்த தேர்வில், நேரடியாக பங்கேற்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளதாக திரு காமகோடி கூறினார்.

>>>>>>><<<<<<<

துல்லியமாகவும், விரைவாகவும் திட்டமிட்டபடி தாக்குதலை முடிக்க வேண்டும் என்ற குறிக்கோளை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை எட்டியதாக விமானப்படை தளபதி *Air Chief Marshal* திரு அமர்பிரீத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று விமானப்படையின் *93*-ஆவது ஆண்டு விழாவில் பேசிய அவர், இந்த ராணுவ நடவடிக்கை பாகிஸ்தானை மண்டியிடச் செய்ததாக தெரிவித்தார்.

முப்படையினருக்கு தேவையான அனைத்து வசதிகளும், தேவையான ஆலோசனைகளும் குறித்த நேரத்தில் தரப்பட்டு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை வெற்றிகரமாக முடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு சூழ்நிலைக்கும் விமானப்படையினர் தயாராக இருக்க வேண்டும் என்று கூறிய *Air Chief Marshal* திரு அமர்பிரீத் சிங், அடுத்தக்கட்டமாக போர் ஏற்படும் நிலை உருவானால், மேலும் பல புதிய உத்திகளுடன் செயல்பட வேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

*Al Ain* மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Shriyanshi Valishetty* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், *18-21*, *21-19*, *21-16*, என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Devika Sihaj*-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் *Arjun Erigaisi* நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டவது நாளான இன்று, ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் *5* விக்கெட் இழப்புக்கு *448* ரன் எடுத்துள்ளது.

கார்-க டெஸ்க் - 13